Sep.2018 இதழ் XXI

You could follow us on
udcnewsletters@gmail.com

# உருமு தனலெட்சுமி கல்லூரி
# நமது வளாகம் – செய்தி மடல்




உழைப்பே உத்தம தொழுகை



கத்தியின்றி இரத்தமின்றி அன்பு வழியில் யுத்தமொன்று செய்தவர் அண்ணல் காந்தியடிகள்! அவரது தலைமையில் எத்தனை எத்தனையோ சுதந்திரப் போராட்டத் தியாகிகள் தமது உடலை மண்ணிற்கும் உயிரை விண்ணிற்கும் அர்ப்பணித்துப் பெற்றுத்தந்த நாட்டு விடுதலையை நாம் அனைவரும் கொண்டாடும் சுதந்திர தினவிழா வழக்கம்போல் நமது கல்லூரியில் உற்சாகத்துடன் நடத்தப்பட்டது. வானில் பட்டொளி வீசிப் பறந்த மூவர்ணக் கொடியும் அதற்குத் தேசியப்டை மாணவர்கள் வீரநடையிட்டுச் செய்த அணிவகுப்பு மரியாதையும் முதல்வர் மற்றும் சிறப்பு விருந்தினர்களின் உரையும் பார்வையாளர்களின் சிந்தையைக் கவரும் வண்ணம் அமைந்திருந்தன. தொடர்ந்து, பெற்றோர் சங்கக் கூட்டத்தில் கல்லூரியின் செயல்பாடுகளை மாணவர்கள் குறுநாடகமாக நடத்திக் காட்டிப் புதுமை படைத்தனர்! மேலும், மாணவர்களின் விளையாட்டுத் திறனை வெளிப்படுத்திய விளையாட்டு விழா, அவர்களது அறிவு மேம்பாட்டிற்காகச் செயல்படும் பாரதி மற்றும் பாரதிதாசன் வாசகர் வட்ட நிகழ்ச்சிகள் என அனைத்தையும் பெருமையுடன் வழங்குகிறது இந்தச் செய்திமடல்!

வாழ்த்துகளுடன், ஆசிரியர்குழு.

**ஆசிரியர் குழு**

முனைவர் N. கண்ணன்
முனைவர் D. இந்திரகுமாரி
முனைவர் P. செந்தில்
முனைவர் B. பிரதீபா
திரு. R. சுவாமிநாதன்
திரு. S. கார்த்திக் சரவணன்
திரு. R. ஆசைத்தம்பி
முனைவர் G. வடிவேல்முருகன்

**நிர்வாகக் குழு**

திருமதி பத்மா இராமகிருஷ்ணன், தலைவர்.
திரு. கல்கி இராமகிருஷ்ணன், செயலாளர்.
திரு. G.N. சீனிவாசன், பொருளாளர்.
Dr. மோதி P. கிருபா சங்கர், நிர்வாகக்குழு உறுப்பினர்.
முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி, கல்லூரி முதல்வர்.

## Centre for Training and Career Planning (CTCP)







நம் கல்லூரி மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் பொருட்டு CTCP சார்பாக ‘உதயா இளையோர் விருது வழங்கும் விழா’ 17.08.2018 அன்று நடைபெற்றது. PPT படைப்புத்திறன் போட்டிகளில் வெற்றிபெற்ற S.M. பெனாசிர் (பொருளியல் துறை), S. தனலட்சுமி (கணிதத்துறை) மாணவிகளுக்குத் தங்கக் காசுகள் மற்றும் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. துறை வாரியாக முதல் இரண்டு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு வெள்ளி நாணயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. பரிசுகளைக் கல்லூரி முதல்வர் வழங்கி வாழ்த்தினார்.

## நூலகத் தினவிழா - 2018

நம் கல்லூரியில் நூலகம் சார்பில் மோதி எஸ். இராஜகோபால் நூலகத் தினவிழா 10.08.2018 அன்று சிறப்பாக நடைபெற்றது. கல்லூரித் தலைவர் பத்மா இராமகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் கல்லூரியின் முதல்வர் முனைவர் D. கிறிஸ்டி செல்வராணி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக ஆப்பிரிக்கா எரிட்ரியா பல்கலைக்கழகப் பேராசிரியர் முனைவர் S. சிவன்கலை அவர்கள் கலந்து கொண்டார். நூலகத் தினத்தை முன்னிட்டு மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தி அதில் வெற்றிபெற்ற மாணவர்களுக்குக் கல்லூரியின் தலைவர் பரிசினை வழங்கிச் சிறப்பித்தார். விழாவில் பேராசிரியர்கள், மாணவ மாணவியர்கள் அனைவரும் பங்கேற்றனர்.






## 72nd INDEPENDENCE DAY - 2018



College Celebrated 72nd Independence Day Celebration on 15th August. Sri.J. Jayaraman, Secretary, Hallmark Business School, hoisted the National Flag and delivered Independence Day Address. Dr. D. Christy Selvarani Principal presided over the function.

## SPORTS DAY - 2018

College 49th annual sports meet was held on 14th August 2018. Col Jubin V Mathew, Sena Medal, Commanding Officer 2, TN BN NCC was the Chief Guest. Sri G.N.Srinivasan, Treasurer, U.D.College council felicitated the function and Principal Dr. D. Christy Selvarani, presided over the function. Major Dr.N. Sivakumar, Director of Physical Education presented the Annual Sports Report, Assistant Director Ezhilarasi listed the prize winners.




## உறவும் உணர்வும் } பாலம்

நம் கல்லூரி வளர்ச்சிக்கு வேராக விளங்கும் பெற்றோர்களுடன் நல்லுறவைத் தொடர, பெற்றோர் சங்கக் கூட்டம் 21.08.2018 அன்று நடைபெற்றது. ஏறத்தாழ 250 பெற்றோர்கள் பங்கு பெற்றனர். கல்லூரியின் செயல்பாடுகளைக் குறித்துக் காணொலிக் காட்சி திரையிடப்பட்டு அதன் அடிப்படையில் பெற்றோர்களுக்கு வினாடிவினாப் போட்டி நிகழ்த்தப்பட்டுப் பரிசுகள் வழங்கப்பட்டது. கல்லூரியில் கல்வி, கலை, கல்விசார், கல்விசாரா செயல்பாடுகளில் வெற்றிபெற்ற மாணவ நட்சத்திரங்கள் விழாவில் கௌரவிக்கப்பட்டனர். உருமு தனலெட்சுமி வித்யாலயா பள்ளியின் தலைமையாசிரியர் முனைவர் இரா. மாது அனுபவ உரையாற்றினார். மாணவர்கள் கல்லூரியில் பெறும் கற்றல் அனுபவங்களை நாடகங்களாக வழங்கினர்.











## பாரதி வாசகர் வட்டம்




13.08.2018 அன்று இயற்பியல்துறை இரண்டாமாண்டு மாணவர் செ. தமிழ்தாசன், உதயணனின் “மயில் நிற மங்கை” என்ற நூலினைப் பாரதி வாசகர் வட்டத்தின் சார்பில் திறனாய்வு செய்தார்.

## பாரதிதாசன் வாசகர் வட்டம்

10.08.2018 அன்று இளங்கலைத் தமிழிலக்கிய மூன்றாமாண்டு மாணவி சி. சாந்தினி, எஸ். இராமகிருஷ்ணனின் “காந்தியோடு பேசுவேன்” என்ற சிறுகதைத் தொகுப்பினைப் பாரதிதாசன் வாசகர் வட்டத்தின் சார்பில் திறனாய்வு செய்தார்.






**A Quiz programme** will be organized by the Newsletter team on 19.09.2018 at Ambujam Ammal Auditorium. The winners will be awarded by the WPD Committee. Topic: **Wonders of the World.** Timing: **12.20 p.m.**